**ரணவிரு சேவா அதிகாரசபையிம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ரணவிரு சேவா அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று/ ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து ரணவிரு சேவா அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2010 மார்ச் 22 இல் அதிகாரசபைக்கு அன்பளிப்பாகப் பெறப்பட்ட | காணியின் பெயரை குறிப்பிடும் போது இது ‘தெல்கஹ கும்புர’ என | தற்போதுள்ள கணக்கீட்டு நடைமுறையினுள் நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | 20.40 பேர்ச்சஸ் பரப்பளவான காணித்துண்டின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அன்பளிப்பாக பெறப்பட்ட ரூபா 50,000 மிகுதித் தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெயரிடப்பட்டுள்ளதால் இது நெற்காணியா அல்லது இல்லையா என்பதை உறுதிப்படுத்தியதன் பின்னர் மதிப்பீடு செய்து எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளின் உண்மையான நிலையைக் காட்டும் வகையில் முகாமைத்துவம் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளைக் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | பயனாளிகள் குறைவடைதல் காரணமாக முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடையதாக செலுத்தப்பட்ட ரூபா 5,183,006 தொகையான நலன்களின் அறவீட்டை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக முன்னைய ஆண்டு சீராக்கமாக அது ஆண்டின் செலவினத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பெறப்பட்ட ரூபா 2,644,431 வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாகக் குறிப்பிடப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 7,827,437 ஆல் நிதிக்கூற்றுக்களில் அதிரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு முதல் சரியாக கணக்கீடு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. | தற்போதுள்ள கணக்கீட்டு நடைமுறையினுள் நிதிக்கூற்றுக்களில் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளின் உண்மையான நிலையைக் காட்டும் வகையில் முகாமைத்துவம் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளைக் கணக்கீடு செய்ய வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சேவையை விட்டு விலகிய பெண் உத்தியோகத்தரிடமிருந்து அதிகாரசபைக்கு பெறவேண்டிய ரூபா 530,380 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,830,450 கூட்டுமொத்தமான முற்பணங்கள் 2020 திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 530,380 தொகையை அறவீடு செய்வதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபர் வழக்குரையை வரைந்திருந்ததுடன் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும். | சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து அதிகாரசபைக்கு பெற வேண்டியவைகளின் அறவீட்டை துரிதப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 யூன் முதல் 2017 நவம்பர் வரையான 18 மாத காலப்பகுதியின் போது போர்வீரர்களின் வளர்ப்பு பெற்றோர் படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரண்டு கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ரூபா 5,940.000 தொகை முறைகேடாக செலுத்தப்பட்டுள்ளது. அந்தத் தொகையில் ரூபா 4,978,580 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தினால் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் பீ/11041/2018 ஆம் இலக்க வழக்கின் கீழ் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாதுகாப்பு அமைச்சில் 2020.07.01 இல் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் இந்த வழக்கு தொடர்பாக பாதுகாப்புச் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க இந்த முரண்பாடு குறித்து விரைவாக விசாரணையை நடத்துவதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் மேலதிக செயலாளருக்கு (பாதுகாப்பு) அறிவித்திருந்தார். | சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து அதிகாரசபைக்கு பெற வேண்டியவைகளின் அறவீட்டை துரிதப்படுத்துதல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 11,933,946 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 14,424,207 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,490,261 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானம் ரூபா 15,171,240 ஆல் குறைவடைந்தமை மற்றும் வட்டி வருமானம் ரூபா 976,729 ஆல் குறைவடைந்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சம்பளங்கள் மூலம் உத்தியோகத்தர்களிடம் இருந்து கழிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டிய அக்ரஹார காப்புறுதி தவணைப் பணத்தின் அரைவாசி அதிகாரசபையால் | இது தொடர்பாக பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நலன்புரி திட்டங்களை தொடங்குவதற்கு முன்னர் முகாமைத்துவம் அனைத்து |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 412,500 தொகை மீளாய்வாண்டின் போது அதற்காக செலவிடப்பட்டது. அத்தகைய நலன்புரித் திட்டத்தை நிறுவுவதற்கு முன்னர் நல்லாட்சி தொடர்பான வழிகாட்டுதல்களின் 9.12 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அத்துடன் உரிய நேரத்தில் அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையால் 2002 ஆம் ஆண்டின் போது தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் மூலம் போர்வீரர்களுக்கு வழங்கப்பட்ட பலாங்கொடை மற்றும் கேகாலையில் அமைந்துள்ள 12 காணித் துண்டுகளின் உரித்துறுதிகளைத் தயாரிப்பதற்குத் தேவையான ஆவணங்கள் தரைப்படை சட்ட பணிப்பாளர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இச் செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பலாங்கொடை மற்றும் கேகாலையில் உள்ள காணிகள் தொடர்பான உரித்துறுதிகளை தயாரிப்பதற்குத் தேவையான ஆவணங்கள் தரைப்படை சட்ட சேவைகள் பணிப்பாளர் குழுவிற்கு 2020.12.08 இல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் மாலம்பேயில் உள்ள காணித்துண்டு ஒன்றின் உரித்துறுதி 2020.12.24 இல் தலைவரால் கையெழுத்திடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு அதிகாரசபையானது அதன் செயற்பாடுகளை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்ற வேண்டியிருப்பதால் அக் காணிகளின் உரிமைத்துவத்தை பயனாளிகளிற்கிடையே மாற்றுவதைத் துரிதப்படுத்துதல். |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| போர் வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் முன்னேற்றத்திற்காக 2009 ஆம் ஆண்டின் போது அக்குரஸ்ஸ பகுதியில் ஏதாவதொரு இடத்தில் வீடொன்றுடன் 01 ஏக்கர், 03 றூட்கள் மற்றும் 22 பேர்ச்கள் பரப்பளவிலான காணியொன்று அதிகாரசபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 21.14 மில்லியன் பெறுமதியான இவ் ஆதனம் 2019 திசெம்பர் 19 தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை 01 வருட காலமாக விளைவற்றிருந்தது. | இந்த முதியோர் இல்லத்தின் ஆரம்பத்தில் 3 முதியவர்கள் குடியிருப்பு வசதிகளை மேற்கொண்டிருந்த போதிலும் 2019 ஒக்தோபர் மாத இறுதியளவில் அவர்கள் அனைவரும் முதியோர் இல்லத்தை விட்டு வெளியேறியிருந்தனர். பாதுகாப்பு செயலாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் முன்னாள் தரைப்படை போர்வீரர்கள் சங்கத்தினால் (Army Ex-services Association) இக் காணியையும் ஆதனத்தையும் (தற்காலிகமாக) முதியோர் இல்லமாக | அதிகாரசபையினால் நன்கொடைகளாக பெறப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயற்படுத்துவதற்கு 2020.12.15 இல் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு தொடக்கம் உதவி பணிப்பாளர், நிர்வாகம் மற்றும் செயற்திட்ட உதவி பணிப்பாளர் ஆகிய இரண்டு பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 அளவில் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்களின் நான்கு பதவிகள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களின் ஏழு பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | புதிய நிர்வாகத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது 01 உதவிப் பணிப்பாளர் (செயற்திட்டங்கள்), 04 நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 07 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. | மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்படும் வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பு செய்வதை துரிதப்படுத்துதல். |